


# தஞ்சை கண்ட தமிழ்க் காட்சி!





புலவர் செந்தலை ந.கவுதமன்

ஒரு சொல்லுக்குள் கொள்கை வரலாற்றை கலைஞர் அவர்கள் நுழைத்த நுண்ணறிவைக் கண்டு 1967இல் ஏற்பட்ட வியப்பு இன்னும் விலகவில்லை.

தஞ்சை மாவட்டத்தில் கல்லணைக்கு அருகே உள்ள ஊர் திருக்காட்டுப்பள்ளி. அதனை ஒட்டிய ஊர் தான் நான் பிறந்த செந்தலை.

எங்கள் ஊரில் ஐந்தாம் வகுப்புவரை படிக்க முடியும். அதற்கு மேல் படிக்கத் திருக்காட்டுப் பள்ளிக்குச் செல்ல வேண்டும். திருக்காட்டுப்பள்ளி சிவசாமி அய்யர் உயர்நிலைப் பள்ளியும், பள்ளியோடு இணைந்த மாணவர் விடுதியும் தஞ்சை மாவட்டத்தில் பழப்பெருமை வாய்ந்தது.

திருக்காட்டுப்பள்ளியில் புதிய பேருந்து நிலையம் கட்டியிருந்தார்கள். “என்ன பெயர் வைக்கலாம்?” எனப் பலவாறு சிந்தித்தும் விவாதித்தும் உள்ளூர்க் கோவில் கடவுளின் பெயரையே வைப்பது எனப் பேரூராட்சியில் முடிவெடுத்திருந்தார்கள். தேவாரப் பாடல் பெற்ற அவ்வூர்க் கோவிலில் உள்ள இறைவன் பெயரைத் தாங்கி **“அக்னீஸ்வரர் பஸ் ஸ்டாண்ட்”** என்று பெயர் வைக்கத் தீர்மானித்து விட்டார்கள்.

தி.மு.கழகம் அரியணையேறி அறிஞர் அண்ணா முதலமைச்சராகி இருந்த நேரம்! பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைக் கொண்டு பேருந்து நிலையத்தைத் திறந்து வைக்க வேண்டுமென ஊர் மக்கள் விரும்பினர். கலைஞர் வர இசைந்தார்.

ஆட்சி தி.மு.கழக ஆட்சி என்பதாலும், திறந்து வைக்க வருபவர் கலைஞர் என்பதாலும், எல்லா இடங்களிலும் தமிழ்மணம் கமழ்வதாலும் பேருந்து நிலையப் பெயரிலும் தமிழ் மணம் கமழ வேண்டும் என்னும் முனைப்பு பிறந்தது.

‘அக்னீஸ்வரர்’ எனும் வட சொல்லை நீக்கிட்டு, **‘தீயாடியப்பர் பேருந்து நிலையம்’** என நுழை வாயில் அழகுற அமைக்கப்பட்டது.

பொதுப்பணித் துறை அமைச்சராக கலைஞர் பொறுப்பேற்றுச் சில மாதங்களே ஆகியிருந்த 1967 ஆம் ஆண்டு.! பேருந்து நிலையத் திறப்பு விழா காலை நேரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருந்த எனக்கு அன்று பள்ளி விடுமுறை. செந்தலைக்கும் திருக்காட்டுப்பள்ளிக்கும் நான்கு கிலோ மீட்டர் தூரம்! நடந்து சென்றால் உரிய நேரத்திற்குச் செல்ல இயலாதே என்ற கவலை.

செந்தலை திராவிடர் கழகத் தலைவரான என் தந்தையார் ச.நடராசன், தி.க. தோழரும் அரசியல் சட்ட எரிப்பு வீரரும் முடிதிருத்தும் நிலைய உரிமையாளருமான தோழர் கோவிந்தராசனோடு மிதிவண்டியில் செல்லச் சொன்னார்.

கூட்டம் தொடங்கியிருக்குமோ என்ற பதற்றத்தோடு, தோழர் கோவிந்தராசனும் நானும் மிதிவண்டியில் பறந்தோம்.

கலைஞர் வந்து விட்டார். அவரை முதன் முறையாக அப்போதுதான் பார்க்கிறேன். ‘அக்னீசுவரர் பெயரைத் தீயாடியப்பர் என்று மாற்றியிருந்தாலும் கலைஞர் இதைப் பற்றி என்ன பேசப் போகிறாரோ?’ எனக் கவலையோடு முணுமுணுத்துக் கொண்டிருந்தார் உடன் வந்த தி.க. தோழர் கோவிந்தராசன்.

பெருத்த ஆரவாரத்துக்கிடையே முத்தமிழறிஞர் கலைஞர் பேச எழுந்தார். வைத்த விழி வாங்காமல் அவரையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது கூட்டம்.

பேருந்து நிலையப் பெயரைக் குறிப்பிட்டுப் பேசத் தொடங்கினார்.

**“ ‘தீயாடியப்பர்’ என்பது உணர்வூட்டும் பெயர்! செந்தமிழைக் காக்கத் தீக்குளித்த சின்னச்சாமி முதலிய தீரர்களை நினைவூட்டும் பெயர். மொழிப்போர் வரலாற்று முத்திரைப் பெயரைப் பேருந்து நிலையத்திற்கு சூட்டியிருக்கும் பெருமையைப் பெற்றுள்ளது திருக்காட்டுப்பள்ளி...”**

தீயாடியப்பருக்குக் கலைஞர் தந்த விளக்கத்தைக் கேட்டு எழுந்த கையொலி அடங்க நெடுநேரமானது.

சாமியை நினைவூட்டும் ‘தீயாடியப்பர்’ எனும் பெயரை, மொழிப்போர் வீரர் சின்னச்சாமியோடு பொருத்தி வைத்துப் புதிய கொள்கை வரலாற்றைத் தமது பேச்சால் உருவாக்கிக் காட்டினார் கலைஞர்.

அன்றைய உரை எழுப்பிய தமிழுணர்வும், கலைஞர் சூட்டிய தமிழ்க் காக்கும் வீரவரலாற்று எழுச்சியும் என்போன்ற இளையோரை இன்னோர் உலகத்திற்கு இழுத்துச் சென்று விட்டன.

பேருந்து நிலையத் திறப்பு விழாவைக் கொள்கை விழாவாக மாற்றிவிட்டார் கலைஞர்! ‘தீயாடியப்பர்’ என்னும் ஒரு சொல்லுக்குள் ஒரு கொள்கை வரலாற்றை நுழைத்த கலைஞரின் நுண்ணறிவு தந்த வியப்பு இன்றும் விலக மறுக்கிறது.

திறந்து வைத்த முத்தமிழறிஞர் கலைஞர் இன்று நினைவாய்த் தொடர்கிறார். அவர் திறந்து வைத்த **திருக்காட்டுப் பள்ளி தீயாடியப்பர் பேருந்து நிலையம்** இன்றும் அதே பெயரோடு, கலைஞரின் மாறாத நினைவுகளைச் சுமந்து நிற்கிறது.

தஞ்சை அன்று பெற்ற தமிழ்க்காட்சியை தமிழ் நாடு என்றும் நினைவு கூர வேண்டும்.

# கலைஞரின் எழுதுகோல் கட்டமைத்த புரட்சி!





கவிஞர் சல்மா

தலைவர் கலைஞரைப் பற்றி நினைத்துக்கொள்வதற்கும் எழுதுவதற்கும் எண்ணற்ற விஷயங்கள் அவரை அறிந்தவர்கள் ஒவ்வொருவருக்குமே இருக்கக்கூடும். அறியாதவர்களுக்கும்கூட.

இந்திய வரலாற்றில் பிறரால் அதிகம் மதிக்கப்படும் தலைவராகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டவர் அவர். இன்னும் பல காலத்திற்கு யாரும் அவரது இடத்தை அடைய முடியாத அளவிற்கு உயர்ந்து நிற்பவரும் அவர்தான்.

அரசியல் தலைவராக, ஒரு இயக்கத்தின் தலைவராக, ஒரு மாநிலத்தின் முதல்வராக எவ்வளவோ விஷயங்களைத் தொட்டு அவர் தொடர்ந்து செயல்பட்டுவந்திருந்தாலும் அவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணமாக இருப்பது அவரது எழுத்தாற்றல்.

அதுதான் அவரது இத்தனை சீர்திருத்தங்களுக்கும் சிந்தனைகளுக்கும் சட்டங்களுக்கும் இந்த அரசியலை மாற்றி அமைத்ததற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது.

அவர் தனது திரைப்படங்களில் எழுதிய வசனங்கள் புரட்சிகரமான சிந்தனைகளாக ஒலித்தன. ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றையெல்லாம் அரசின் சட்டங்களாக மாற்றும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு அவற்றை நிறைவேற்றிக் காட்டினார்.

ஒரு ஆட்சியாளர் வெறுமனே அரசியல்வாதியாக மட்டுமில்லாமல் ஒரு எழுத்தாளராகவும் இருப்பதன் பயனை இந்த மாநிலத்தின் மக்களுக்கு முழுமையாக அவரால் தர முடிந்தது. மகத்தான தலைவரான அவர் சிறந்த எழுத்தாளராகவும் இருந்தது தமிழகத்தின் நற்பேறு.

இந்த சமூகத்தில் எவையெல்லாம் அவருக்குச் சகிக்க முடியாததாக இருந்தனவோ - எவையெல்லாம் அநீதியாகத் தெரிந்தனவோ - எவையெல்லாம் மாற்றப்பட வேண்டும் என்று நினைத்தாரோ அவற்றைப் பற்றியெல்லாம் அவர் தனது படைப்புகளில் பேசினார். படைப்புகளின் வழியாகத் தன் சிந்தனைகளை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க முடிந்தது. அவரது படைப்புகள் சமூக மாற்றத்திற்கான அறை கூவலைக் கொண்டதாக அமைந்திருந்தன. அதற்கான திட்டத்தை முன்வைப்பவையாக இருந்தன. சமூக மாற்றத்திற்கு இலக்கியத்தின் பங்களிப்பு என்பது அதுதான்.

இப்படியாக, வாழ்நாள் முழுவதும்எழுத்தின் வழியாகத் தான் முன்வைத்த கனவுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகத் தனது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டார் கலைஞர்.

தத்துவார்த்தச் சிந்தனையாளர் எப்படி இயங்குவார் என்பதற்கான உதாரணமாக அவர் இருந்தார். சமூக மாற்றம் என்பது அத்தனை எளிதாகச் செய்து முடிக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. அதனை அவர் அறிந்திருந்ததால்தான் அவர் தன்னுடைய ஆட்சியின்போது படிப்படியாக அதை நோக்கிப் பயணித்தார். அதிகாரத்தில் இருந்தபோது ஒவ்வொரு முறையும் புதிதான பல சட்டங்களை நிறைவேற்றிக் காட்டினார்.

சட்டங்களைப் போட்டால் மட்டும் போதாது. சமூகம் அந்தச் சட்டங்களை ஏற்கச் செய்ய வேண்டுமென்றால் அந்தச் சட்டத்தின் நியாயங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லும் வாக்குவன்மை இருக்க வேண்டும். சட்டங்களைப் பிறப்பிப்பதற்கு முன்பே தன் எழுத்தாலும் பேச்சாலும் அந்தச் சட்டங்களுக்குப் பின்னால் இருக்கும் சிந்தனைகளை அழுத்தமாக முன்வைத்தவர் கலைஞர். சட்டங்களைப் பிறப்பித்த பிறகும் அவற்றின் நியாயங்களை விளக்கி அவர் எழுதிய சொல்லோவியங்கள் அந்தச் சட்டங்களை மக்கள் மனதார ஏற்கச்செய்வதில் பங்காற்றின. அவர் பிறப்பித்த சட்டங்கள் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கின்றன.

**சமூக மாற்றத்தைத் தனது தோள்களின் மீது சுமந்து அதை நிறைவேற்றிக் காட்டியவர் கலைஞர். அவருடைய எழுத்தும் சிந்தனையும் செயல்களும் மனிதர்களை அவர் எந்த அளவிற்கு நேசித்தார் என்பதை உலகுக்குக் காட்டக்கூடியவை. எந்த மாநிலத்திலும் சட்டமாக்கப்பட இயலாத பல சட்டங்களை அவர் இயற்றினார். சமத்துவபுரங்களை உருவாக்கினார். பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தை இயற்றினார். இந்தச் சமூகத்தின் மிக இறுக்கமான இரண்டு விஷயங்களை அடித்து நொறுக்கக்கூடிய சட்டங்களாக அவை இருந்தன.**

**பல விதமான எதிர்ப்பினையும் தாண்டி அவர் தனது கொள்கையில் துணிந்து நின்றதன் சாட்சியாக அவை இருந்தன. அவற்றைச் சட்டமாக்கித் தனது நெஞ்சுரத்தையும் சமூகத்தின் மீதான நேசத்தையும் உறுதியாக வெளிப்படுத்தினார்.**

தந்தை பெரியாரின் கனவுகளை, பேரறிஞர் அண்ணா அவர்களது சிந்தனைகளை, சமூகத்திடம் கொண்டுசெல்வதற்காக அவர் தனது எழுத்தாற்றலையும் அவரது ஆட்சி அதிகாரத்தையும் முழுமையாகப் பயன்படுத்தினார். அப்படிப் பயன்படுத்துவதன் வழியாக அவர் இந்த சமூகத்திடம் தனக்கான அடையாளத்தை நிறுவினார்.

கட்சித் தொண்டர்களைச் சக மனிதர்களாக நெஞ்சார அணைத்துக்கொள்ளக் கூடியவராகவும் அந்தப் பரவசத்தைத் தனக்கான பலமாகக் கொண்டவராகவும் வாழ்ந்தார். அவர்களோடு உரையாடுதலின் வழியாக அவர் தன்னை உயிர்ப்புடன் வைத்துக் கொண்டார். தன்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்தவராக இருந்தார். தினமும் அறிவாலய வாசலில் நின்று நேசத்தைத் தரக் காத்திருக்கும் எளிய இதயங்களை அவர் ஏமாற்றியதில்லை. அவர்களிடமிருந்த அந்த அன்பைப் பெற்றுக்கொள்ள ஓடோடி வரும் மாபெரும் தலைவர் கலைஞர்.

அவர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்கிற பெருமையே நமக்குப் போதுமானதாக இருக்கும். என்றென்றைக்கும்.